# தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

(அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள் முதலியவற்றில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கான பொது அமைப்பு)
பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை - 600 005

தொலைபேசி எண்: 044 – 2851 5445 மின்னஞ்சல்: aoe_aea@yahoo.com

தலைவர்
பொறிஞர் எஸ்.ஆனந்த், எம்.இ.,
கைபேசி எண் : 94440 14305

துணைத்தலைவர்
பொறிஞர் என். மதிமாறன், பி.இ,
கைபேசி எண் : 98423 70553

பொதுச்செயலாளர்
பொறிஞர் க. அன்பு, எம்.இ.,
கைபேசி எண் : 97918 60489

செயலாளர்கள்
பொறிஞர் எஸ்.பிரகாஷ், பி.இ., எம்.பி.ஏ.,
கைபேசி எண் : 94886 66555

பொறிஞர் பி.டி.வி.சுரேஷ்குமார், பி.இ., எம்.பி.ஏ.,
கைபேசி எண் : 99625 11899

பொறிஞர் ஆர். சீனிவாசன், பி.இ.,
கைபேசி எண் : 97101 13994

பொறிஞர் நெ.செந்தில்குமார், எம்.டெக்.,
கைபேசி எண் :78108 80668

பொருளாளர்
பொறிஞர் பி. நடராஜா, பி.இ.,
கைபேசி எண் : 94443 33440

தணிக்கை அலுவலர்
பொறிஞர் ஏ. தேன்மொழி, பி.இ.,
கைபேசி எண் :94421 89236


## தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

நாள் : 16.12.2017

### செய்திக் குறிப்பு

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் விழுப்புரம் மண்டலக் கூட்டம் இன்று (16.12.2017) V.V.ஆறுமுகசெட்டியார் மகாலில் நடைபெற்றது. கூட்டத்தில், தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித்துறை, தொழிலக பாதுகாப்புத் துறை, வேளாண் பொறியியல் துறை, மின் ஆய்வுத்துறை போன்ற அரசுத் துறைகளிலும் மின் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் போன்ற வாரியங்களிலும், உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும், போக்குவரத்துக் கழகங்கள் போன்ற பொதுத்துறை நிறுவனங்களிலும் பணிபுரியும் பட்டதாரி பொறியாளர்களின் விழுப்புரம் மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சுமார் 300 பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

அண்மையில் தமிழக அரசு ஊழியர்களுக்கு ஏழாவது மத்திய ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்தி வெளியிடப்பட்ட அரசாணைகள் எண். 303, 319, 328 ஆகியவை பொறியாளர்களின் ஊதியத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைந்திட நிரந்தர வழி காணாமல் ஊதியக் குறைப்புக்கு வழி செய்த அரசாணை எண்.242–ஐ அடிப்படையாகக் கொண்டு புதிய ஊதியம் நிர்ணயிக்கலாம் அல்லது ஊதிய மாற்றமே இல்லை என்று தெரிவித்திருப்பது 10000 பட்டதாரிப் பொறியாளர்களை ஏமாற்றுவதாக உள்ளது என்று கூட்டத்தில் பேசிய அனைவரும் தெரிவித்தனர்.

கூட்ட முடிவில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், பொறியாளர். க.அன்பு அவர்கள் முன்மொழிய கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பட்டதாரிப் பொறியாளர்கள் ஊதிய முரண்பாடுகளை நிரந்தரமாகக் களைந்திட வழி செய்யாத அரசாணை எண்.328 பெரிதும் ஏமாற்றம் தருவதாகவுள்ளது. எனவே, அரசுத் துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பி.இ. படித்த உதவிப் பொறியாளர்களுக்குத் தொடக்க நிலை ஊதியமாக ராஜீவ்ரஞ்சன் தலைமையில் ஒரு நபர்குழு பரிந்துரைத்த ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.5400 (ஆறாவது ஊதியக் குழு) என்பதை உறுதி செய்து அதனடிப்படையில் அனைத்து அரசுப் பணியாளருக்கும் வழங்கியது போல் ஏழாவது ஊதியக் குழு திட்டத்தில் ஊதிய மாற்றம் செய்து ஆணை வழங்கிடத் தமிழக அரசினை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

2. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் முறையிட்டும் நடவடிக்கை இல்லாததால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற பொறியியல் துறைகளுக்குப் பொறுப்பேற்றுள்ளதால் அவர்களின் நேரடிக் கவனத்தினை ஈர்க்கும் வண்ணம் மாநிலம் தழுவிய இயக்கம் ஒன்று ஜனவரி மூன்றாம் வாரத்தில் சென்னையில் நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

3. விழுப்புரம் மண்டலத்தில் கூட்டமைப்பின் பணிகளை ஒருங்கிணைக்கும் வண்ணம், கீழ்க்கண்ட பொறியாளர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு நியமிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. E.ராஜ்குமார். |
| உறுப்பினர்கள் | : | பொறி.K.கனகராஜ் PWD |
| | | பொறி.B.சக்திவேல் RD |
| | | பொறி.பழனிவேல் Agri |
| | | பொறி. G.சதாசிவம் TNEB |
| | | பொறி. K.முகமது நாசர் Transport |
| | | பொறி.V.அன்பழகன் TWAD |

**(பொறிஞர்.K.அன்பு)**
**பொதுச் செயலாளர்,**
**தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு.**